# Theological Ethics Expounded in Thirumurais

**Dr. V. Sheela**
*Associate Professor*
*Justice Basheer Ahmed Sayeed College for Women, Teynampet, Chennai*

**Abstract**
*Religion as an institution refers to establishing harmonious rapport with a power superior to human capability, which is believed to control or direct the course of nature and human life. Durkheim states that religion is a form of sociology, and it is understood based on the surrounding world, encompassing human life and the relationships among human races. The primary objective of devotional literature is to worship God and attain the purpose of life/salvation.*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255832

**References**

1. Easwarapillai, Tha., Social Perspective in Devotional Literature, p.11.
2. Ibid., p.12.
3. Thirumandiram, 248.
4. Ibid., 264:3-4.
5. Ibid., 250.
6. Ibid., 196.
7. Ibid., 252.
8. Ibid., 2901.
9. Ibid., 2891.
10. Ibid., 2927.
11. Ibid., 2422.
12. Ibid., 2423.
13. Ibid., 2192.
14. Ibid., 2034.
15. Ibid., 2024.
16. Thirugnanam, 2905.
17. Ibid., 2909.
18. Thirumandiram, 1686.
19. Ibid., 1677.
20. Ibid., 2313.

# திருமுறைகள் உணர்த்தும் இறையியல் ஒழுக்கநெறி

***முனைவர் வெ. ஷீலா***
இணைப் பேராசிரியர்
ஜஸ்டிஸ் பஷீர் அஹ்மத் சயீது மகளிர் கல்லூரி
தேனாம்பேட்டை, சென்னை

***ஆய்வுச்சுருக்கம்***
*இயற்கையின் போக்கையும், மனித வாழ்க்கையையும், கட்டுப்படுத்துவதற்காகவோ அல்லது இயக்கப் பெறுவதற்காகவோ நம்பப்பெறும் மனிதசக்திக்கும் மேலான ஒரு சக்தியுடன் நல்லிணக்கம் செய்துக் கொள்வதையே சமயம் என்ற நிறுவனம் குறிக்கிறது. டாக்கியாம் என்பவர் சமயம் ஒரு வகையான சமூகவியல் என்றும், மனித வாழ்க்கையையும், மனித இனங்களுக்கிடையேயுள்ள உறவுகளையும் சுற்றுப்புற உலகை அடிப்படையாகக் கொண்டு அது விளங்குகிறது. பக்தி இலக்கியத்தின் முதல் நோக்கமே இறைவனைத் தொழுது பிறவிப்பயனை அடைவது ஆகும்.*

**முன்னுரை**

இறையியல் என்பது இறையின் தன்மை மற்றும் மனித இனத்திற்கும் இடையிலான உறவு குறித்தும் நம்பிக்கை கோட்பாடுகள் ஒழுக்க நெறிகள் பற்றி ஆராய்வது. அவ்வகையில் சைவ திருமுறைகள் இறைத் தன்மையை, இறையருளை, இறைபேராற்றலை மனிதனுக்கு உணர்த்த முற்படுகையில், மனிதனை நேர்வழிப்படுத்தும் நிலையில், தனிமனித ஒழுக்கம், சமூக ஒழுக்கத்தையும் கூறியுள்ளது. இவ்வகையில், திருமுறைகள் உணர்த்தும் இறையியல் ஒழுக்கநெறி என்னும் தலைப்பில் இக்கட்டுரை ஆராய்கிறது.

**சமூகநலம் - மரம் வளர்ப்போம்**

மனித மனம் வளமடைய வேண்டுமானால் புறஒழுக்கமும், அகவொழுக்கமும் இன்றியமையாததாகும். புறஒழுக்கம், சுற்றுச்சூழலை பாதுகாக்கும். அகவொழுக்கம் தனிமனித, சமூக, இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் என்பதை அருளாளர்களின் திருமுறைகளில் உய்த்துணர முடிகிறது. நீருக்கு ஆதாரமான வான் மழையின் சிறப்பினை பாடுகையில்,

***"அமுதூறு மாமழை நீரதனாலே
அமுதூறும்பன் மரம்பார் மிசைதோற்றம்
கமுகூறு தெங்குகரும் பொடுவாழை
அமுதூறும் காஞ்சிரை ஆங்கது வாகுவே"[3]***

இயற்கை வளம் கொழிக்க மழைதேவை. மரங்களே மழையைத் தருவிக்கின்றன. பயன் தரும் மரங்களாக பாக்குமரம், தென்னைமரம், கரும்பு, வாழை போன்றவை ஓங்கி செழித்து வளரும் என்று கூறியவர் பயன் தரும் மரங்களை மட்டும் வளர்த்து காட்டு மரங்களை அழித்து விடக் கூடாது. அதில் மழையைத் தரும் மறைமுகப் பயன் உண்டு. அவ்வாறு மரங்களை வளர்க்கவில்லையென்றால், மழை இல்லாமல் பூமி காஞ்சிர காய் போல் துன்பம் தந்து வறண்டு போகும் என்று காஞ்சிரை ஆங்கதுவாமே என்று கூறுகிறார். மேலும் இயற்கை பாதுகாவலராகி,

***"கரகத்தால் நீராட்டிக் காவைவளர்க்கார்
நரகத்தால் நிற்றிரோ நன்நெஞ்சினீரே"[4]***

என்று தொலை நோக்கு பார்வையுடன் இயற்கையைப் பேண மரங்களை, செடி, கொடிகளை வளர்க்காதவர்கள் நரகத்தை அடைவார்கள் என்று புறம் சார்ந்த ஒழுக்கநிலையை சீர்படுத்த வேண்டும் என்ற முனைப்போடு எச்சரிக்கிறார்.

மனிதர்கள் அக வாழ்க்கையில் மேம்பட வேண்டுமானால் ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் சமுதாயம் நல்வாழ்வு பெறும் என்பதை பசியாற்றல், கள்ளுண்ணாமை, செல்வம் நிலையாமை, பிறர்மனை நோக்காமை, பொய்மை மகளிர் நிலை, ஒழுக்கம் அற்றோர் சேர்க்கும் செல்வம் பயனற்றது. ஒழுக்கம் அற்றாருக்கு உதவுதல் கூடாது போன்ற தனிமனித ஒழுக்க நிலையை எடுத்துரைக்கின்றனர்.

### பசியாற்றுதல்

மனிதர்களின் தலையாய அறம் என்பது பிறருக்கு உணவு இட்டு உண்பதே சிறந்தது என்று கூறுகையில், காக்கைளை உதாரணமாக்கி,

**"ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்**
**பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணும் காலம்அறிமினே"[5]**

காக்கைக் கூட உணவு உண்ட போது எல்லாக் காக்கைகளையும் விரைந்து அழைத்து பகிர்ந்துண்ணுகிறது. மனிதனும் அவ்வாறு தனித்து உண்ணாமல் பிறருக்கு அளித்துவிட்டு தான் பசியாற வேண்டும் இதுவே சிறந்த அறம் என்கிறார். மேலும்,

**"அவ்வியம்பேசி அறங்கெடநில்லன்மின்**
**செவ்வியனாகிப் பிறர்பொருள் வவ்வல்மின்**
**செவ்வியனாகிச் சிறந்துண்ணும் போதுஒரு**
**தவ்விக்கொடு உண்மின் தலைப்பட்டபோதே"[6]**

என்று கூறிப் பிறர்பொருளைக் கவர எண்ணக் கூடாது. செம்மையான வாழ்வு வாழவேண்டுமானால் உண்ணும் போது வருவோர்க்கு ஓர் அகப்பை உணவு கொடுத்த பின் உண்ண வேண்டும்,

**"யாவர்க்குமாம் இறைவனார்க்கு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொருகைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே"[7]**

மனிதன் பின்பற்றக் கூடிய எளிமையான அறத்தை கூறுகிறார். மனித இனத்திற்கு மட்டுமல்லாமல், பிற உயிரினங்களுக்கு உணவிடுதல் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றார்.

### அறியாமையை அகற்ற வேண்டும்

மனிதர்கள் அறியாமையில் திளைக்கின்றனர். இவற்றை அகற்றினால் மனம் தூயசிந்தனைப் பெறும் என்பதை,

**"கொட்டியும் ஆம்பலும் பூத்தகுளத்திடை**
**எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்**
**கட்டியும்தேனும் கலந்துண்ண மாட்டாதார்**
**எட்டி எழுந்துக்கிளைக் கின்றவாறே"[8]**

இவ்வாறு கூறுகின்றார். மக்கள் வெல்லக் கட்டியும், தேனும், கனியும் உண்ணத் தெரியாமல் எட்டிக்காய்க்கு ஆசைப்பட்டு அவதிப்படுகிறார்கள் என்று அவர்தம் அறியாமையைச் சுட்டுகின்றார்.

"அறியாமை என்னும் கோட்டானும், காமஇச்சை என்னும் பாம்பும், தர்மம் என்கிற கிளியுடன் அதர்மம் என்கிற பூனையும், சிற்றறிவுடைய நாகண வாய்ப்பறவையும், வஞ்சமிக்க காடையும் ஆகிய இவை அனைத்தும் மனித உடம்புக்கு நடுவேயுள்ள மனத்தில் குடி கொண்டுள்ளன. நாகணவாய்ப் பறவையான சிற்றறிவை, அறியாமையாகிய கோட்டான் அழிக்க நெருங்கும்போது கோட்டானை விரட்ட சுண்டெலி ஒலியெழுப்பி நாகண வாய்ப்பறவையை எச்சரித்து கோட்டானிடமிருந்து காப்பாற்றும் எலி இங்கு ஆருயிரைக் குறிக்கின்றது.[9] பரம்பொருளைத் துணையாகக் கொண்டால் அறியாமையென்னும் கோட்டானை விரட்டி அருள்ஞானம் பெறவேண்டும் என்பதை தெளிவுபடுத்த பறவை இனங்களைச் சுட்டி எளிமையாக தெளிவுபடுத்துகிறார்.

### மனமாசுக்களை நீக்குதல்

"நீர் குளத்தில் பாசிபடிந்திருப்பதைப் போல ஆருயிர்களின் மனமாகிய குளத்தில்

போட்டி, பொறாமை, காமம், வெகுளி என்னும் மாசுகள் மண்டிக் கிடக்கின்றன. இந்நிலையில் சீவன் ஐம்புலன் வழிச் செல்லும் இச்சைகளை நுகர்வதையே உயிருக்கு உணவாகக் கொண்டு வாழ்கிறது. மனித உயிர் நல்வழிப் பட மன உறுதி திடசித்தம் என்னும் சிவனருள் துணை செய்ய ஆருயிர் ஆசை வழிப்பாசம் அழுக்குகள் அகன்றொழியும்.'[10] மன அழுக்குகளை நீக்க வேண்டுமானால் இறைச் சிந்தனையில் மனதில் வைத்து இரவும் பகலும் இடைவிடாது உருக வேண்டும். அப்போது பாறைக் கல் போன்ற ஆணவ இருள் அகன்று சிவக்காட்சி தோன்றும்.'[11] அழுக்கடைந்த துணிகளின் அழுக்கை நீக்க உவர் மண்ணைக் கொண்டு துவைத்து வெளுப்பது போல ஆன்மாக்கள் ஆசையை விட்டொழித்து வெளிவர அவைகளுக்கு ஆசையை ஊட்டுகிறார்'[12] திருமூலர். மேலும் 'ஆன்மாவைப் பற்றும் ஆணவம், மாயை, கன்மம் என்னும் வலிமை மிக்க மும்மலங்களும் முளைகின்ற விதையும் அதை மூடியிருக்கும் உமியும் போன்றதாகும். ஆருயிர்களை மூடியிருப்பதால் ஆன்மா சிவனோடு சேராமல் தனித்து இருக்கும். எனவே பாசப்பிணைப்பை விட்டொழித்து பரம்பொருள் திருவடியை போற்றி வழிபட வேண்டும்."[13] இவ்வாறு மனித மனங்களை சீர்குலையச் செய்யும் அழுக்குகளை நீக்க வேண்டும் என்பதை வலியுறுத்த இயற்கைச் சார்ந்த பொருள்களை கூறியிருப்பது அதன் அழுத்தத்தை உணர்த்துகிறது.

"மனமானது அறிவின் ஏவலுக்கு அடங்காது அவை தம் இச்சைப்படி இன்பம் நுகர்ந்து உடல் அழியக் காரணமானதை யானைகள் அங்கு சத்திற்கு அடங்காது. கரும்பு கொல்லையிலே புகுந்து தின்று கொழுத்து, கரும்புக் காட்டையே அழித்தன"[13] என்பதாக உணர்த்தி அருளினார் திருமூலர். யானையின் கழுத்தின் மேல் உட்கார்ந்து யானையை அதட்டி மிரட்டிச் செலுத்த முயன்றாலும், அந்த யானை தான் முன்சென்ற வழியில் செல்ல முடியாது. எனவே "யோக பயிற்சியால் மனதை அடக்குதலே சிறப்பு"[14] என்கிறார்.

திருஞானசம்பந்தர், "நீர்க் குழியானது நீரில் தோன்றி நீரில் மறையும் தன்மை போன்ற உடலை பாதுகாப்பதில் கவனமாக இருந்தேன்"[15] என்றும், "நீர் உலையினுள் உள்ள ஆமை முதலில் மென்மையால் நீர் இருப்பதை அறிந்து மகிழ்தல் போலவும், பின்னர் வெம்மை ஏற ஏற அச்சூடுதாங்காது மடியும் அவ்வாமையை ஒத்தேன் என்று கூறுகிறார். ஐம்புல ஆசையால் உடல் நலிவு எய்தி, நலம்குன்றி, கெட்டு அழிகிறேன்"[16] என்று தன்னிலை குறித்து வருந்துகின்றார்.

## பக்குவம் பெற்ற மனம் பற்றற்று இருக்கும்

மனதில் உள்ள அழுக்குகளை நீக்கி, உள் மனதில் இறைவனை நிறுத்தினால் மனம் பக்குவம் அடைந்து தூய்மை பெறும். "பிறரைக் கோபித்தலும், கண்டதற்கு ஆசைப்படுவதும், தீய காரியங்களாகிய செயல்களைச் செய்வதும், உண்ணுதலும், சுவைத்து இன்புறுதலும், மற்றவர்களுக்கு தீமைசெய்வதும், இல்லாததை எண்ணிக் குறைபட்டுக் கொள்ளுதலும், தம்மையே புகழ்ந்து தருக்கிக் கொள்வதும், தற்பெருமை பேசித்திரிவதும் என்ற இவையெல்லாம் இறைவனிடம் அன்பு கொண்ட பக்குவம் பெற்ற பெரியோர்களின் இயல்பு அல்ல."[17] எனவே உயிரில் கலந்து இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை அறிந்துக் கொள்ளாமல் இருப்பவர்கள், "அலைகடலில் அகப்பட்டு அங்கும் இங்கும் அலையும் மரக்கட்டை போல் அலைக்கழித்து சீரழிவர்.[18] என்று எச்சரிக்கின்றார்.

## வீண்பெருமை கூடாது

தனி மனித ஒழுக்கத்தில் ஒன்று வீண் பெருமை பேசுவது. இது பகட்டான நிலைக்கு இட்டுச் செல்லும்பேரிருள் சூழ்ந்த நரக வாழ்க்கையில் தள்ளும் "வானவெளியில் பருந்தொன்று பறந்துச் செல்வதைப் பார்த்துக்

கீழே புற்றுக்குள் இருக்கிற பாம்பு அடங்கி ஒடுங்கிக்கிடப்பதைப் போல மனமே வீண் பெருமைப் பேசுவதை விட்டொழித்து விட்டு அடங்கி கிடப்பாயாக. குடிக்க இயலாத கடலுக்கு போய் சேர்ந்து, நல்ல நீருடைய ஆறு கடலோடு இரண்டறக் கலந்து அடங்கி இருப்பதைப் போல நீயும் அடங்கி இருப்பாயாக."[19] வீண் பெருமை மனித மாண்பை சீர்குலையச் செய்துவிடும் என்பதை உணர்த்த இயற்கை நிகழ்வுகளை எடுத்துக் கூறியுள்ளார் திருமூலர்.

## பிறர்மனை நோக்காமை

மனிதர்களின் வாழ்வியலை சிதைக்க கூடிய ஆற்றல் ஆசைக்கு உண்டு. எல்லாம் தனக்கே உடமையாதல் வேண்டும் என்ற பேராசையே ஒழுக்ககேடுகளின் ஊற்றாக இருக்கிறது. செல்வத்தின் மீதும், உடலின் மீதும் போகம் கொண்டவர்கள் செய்யும் ஒழுக்ககேடுகளுள் முதன்மையாக இருப்பது பிறன்மனை நயத்தல் ஆகும். இது குடும்ப அமைதியையும் சமுதாய அமைப்பையும் ஒழுங்கையும் கெடுத்து சிதைத்துவிடும். இதை உணரச் செய்யும் வகையில் பிறமனைவியை அடைய விரும்பும் இளைஞர்களின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறார்.

**"காய்ச்ச பலாவின்கனி உண்ணமாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக்கு இடர்உற்றாரே"[20]**

என்றும்,

**"திருத்தி வளர்த்ததோர் தேமாங்கனியை**
**அருத்தம் என்றெண்ணி அறையில் புதைத்துப்**
**பொருத்தம் இலாதபுளிமாங்கொம்பேறிக்**
**கருத்தறியாதவர் கால் அற்றவாரே"[21]**

எனப் பாடுகின்றார். சுவை மிகுந்த பலாகனியை உண்ணாமல் எங்கோ பழுத்துக் கிடக்கின்ற ஈச்சம் பழத்துக்கு ஆசைப்பட்டு அவதிப்படுவதைப் போன்றதாகும். நன்றாக உரமிட்டு, நீர் பாய்ச்சி பாதுகாத்து வளர்த்துள்ள சுவை மிக்க மாமரத்தின் பழத்தை பொன் போல் எண்ணி அறைக்குள் போட்டு பூட்டி வைத்துவிட்டு, உண்ணத்தகாத புளிய மரத்திலேறி அதைப் பறித்துண்ணத் துடிக்கும் அறிவற்றவர்கள் காலை முறித்துக் கொண்டதைப் போன்ற அறிவீனம், அழகிய மனைவி வீட்டில் இருக்க அவளை ஒதுக்கிவிட்டு அடுத்தவர் மனைவி மேல் ஆசைப்பட்டு அவளை அடையப் போய் அவமானப்பட்டு கவலைப்படுவது போன்றதாகும். மேலும் "பிறர் மனைவியை அடைய ஆசைப்பட்டால், அந்த ஆசை ஆழம் காண முடியாத சுழியில் புரட்டிப் போடும் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கித் தவிப்பதைப் போன்ற துன்பத்திற்கு ஆளாகும்"[22] என்று எச்சரிக்கின்றார். இருவேறு பழங்களின் சுவையை வேறுபடுத்தி காட்டி பாமரர்களுக்கு புரியும் வகையில் எடுத்து கூறியிருக்கிறார்.

## பெண்ணாசை

அழகுடன் விளங்கும் பெண்களைக் கண்டவர்கள் இவையெல்லாம் நிலையானவை என்று நினைத்து இவையே வாழ்க்கை என்றெண்ணி அதிலே திளைத்து கிடக்கின்றனர். இவையெல்லாம் நிலையாக இருப்பவை அல்ல.

**"பாறையில் உற்ற பறக்கின்ற சீலைபோல்**
**ஆறைக் குழியில் அழுந்துகின்றாரே"[23]**

பாறை மேல்கிடக்கின்ற ஈரம் உலரக்காயப் போட்ட சேலைகாற்றடித்தால்பறந்தோடிப் போவதைப் போல இவையும் ஒரு நாள் காணாமல் போகும் என்பதை உணராமல் பெண்ணாசைக் கொண்டு துன்பப் புதைக் குழியில் தோய்ந்து கிடக்கின்றனரே என்று வருந்துகின்றார்.

## பொய்மை மகளிர் நிலை

பொய்மை மகளிர் பொருள் மீது பற்றுக் கொண்டவர்கள். அவர்கள் பின் சென்றால் துன்பம் மட்டுமே மிஞ்சும். இதனை,

**"இலைநல ஆயினும் எட்டிபழுத்தால்**
**குணநலவாம் கனிகொண்டு உணல்ஆகா"[24]**

**"சுகைஅகத்தே கரும்பாலையின் சாறுகொள்**
**மெய்அகத்தே பேறு வேம்பதுவாமே"[25]**

என்று பொய்மை மகளிரை புல், எட்டிப்பழம், வேப்பங்காய் என்றெல்லாம் விளக்கி இவை மனிதனுக்கு ஏற்றதல்ல, சீர்குலைக்க செய்யக் கூடியது என விளக்குகிறார்.

### கள்ளுண்ணாமை

இழிந்த காமத்தை உள்ளத்தில் கொண்டவர்கள் கள்ளுண்ணலாகிய இழிந்த நிலைக்கும் ஆட்பட்டு விடுவர் என்று கூறியவர்கள்ளுண்ணும் மனிதர்களைக் கண்டு,

**"கழுநீர்ப் பசுப்பெறின் கயந்தொறும்தேரா**
**கழுநீர் விடாய்த்துத் தங்காயம் சுருக்கும்**
**முழுநீர்க்கள்ளுண் போர்முறைமை அகன்றோர்**
**செழுநீர் சிவன்தன் சிவானந்தத் தேறலே"[26]**

பசுக் கூடக் கழுநீர் கிடைக்கும் வரை தாகம்பொறுத்துக்கொண்டுகாத்திருக்கிறது. மனிதனோ கள்ளுண்டு கெடுகின்றானே என்று அவர் அறியாமைக் கண்டு பசுவோடு மனிதனை ஒப்புமைப்படுத்தி உள்ளம் பதைக்கின்றார்.

### செல்வம் நிலையாமை

சிவனின் பேரருள் மேகம் பொழிவது போல பெருஞ்செல்வங்களை மழையாகப் பொழிவார் என்று கூறிய திருமூலர் மனிதனின். பேராசையால் செல்வத்திற்கு பின் சென்றால் நேரும் கேடுகளை விளம்புகிறார்.

**"ஈட்டியதேன் பூமணம் கண்டு இரதமும்**
**கூட்டிக் கொணர்ந்து ஒருகொம்பிடை வைத்திடும்**
**ஓட்டித் துரத்திவிட்டு அதுவலியார் கொளக்**
**காட்டிக் கொடுத்தது கைவிட்டவாறே"[27]**

தேனீக்கள் பல நாள் பலவகை மலர்களிலிருந்து தேனைச் சேகரித்து வைத்திருக்கும் தேனடையை, மனிதன் ஒரு நாள் கவர்ந்து செல்வதைப் போல, மனிதன் சேர்த்து வைத்த செல்வத்தை வலியவர் கவர்ந்து செல்வர். ஆற்று வெள்ளம் போல பெருகிவரும் செல்வச் செழிப்பைக் கண்டு மயங்காதே, வந்தது போல ஒரு நாள் திடீரென்று வற்றியும் போகும் என்றும் வெள்ளத்தில் கவிழ்கின்ற படகு போலச் செல்வம் நிலையில்லாதது என்பதனைப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

**"தேற்றத் தெளிமின் தெளிந்த நீர்கலங்கல்மின்**
**ஆற்றுப் பெருக்கில் கலக்கிமலக்காதே"[28]**
**"மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே**
**கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்"[29]**

இவ்வரிகளால் உணர்த்துகின்றார். செல்வம் மாறிக் கொண்டே இருக்கும் தன்மையுடையது. வெளிப்பார்வைக்குச் செல்வம் இருப்பது போல் தோன்றும். ஆனால் செல்வம் இருக்காது என்பதனை,

**"மேவுசெல்வங்களிறுண் விளங்கனி**
**ஆவதாகியழியவும்"[30]**

என்று கூறுகிறார் சேக்கிழார். விளாக்கனிக்கு யானை நோய் என்ற நோய் வரும். பார்ப்பதற்கு கனி போல் தோன்றும் உள்ளே ஒன்றும் இருக்காது. நோய் வந்ததை "களிறுண்விளங்கனி' என மொழிந்தார்.

### ஒழுக்கம் அற்றார் சேர்க்கும் செல்வம் பயனற்றது

நிலையில்லாத செல்வமெல்லாம் இறைவன் தந்தவை என்ற உண்மையை உணராமல், பிறருக்கு கொடுத்து மகிழாமல், பேராசைக் கொண்டு வட்டிப் பெற்று இவ்வுலகில் செல்வத்தைச் சேர்ப்பவர்கள் பயனறியா பாதகர் என்று கூறியவர் அவர்களின் செயல்களை, எட்டிக்காய் உடன் தொடர்புபடுத்தி கூறியுள்ளார். இக்காய் உண்பவரை கொல்லும் தன்மையுடையது, அது பழுத்தால் பயன் ஒன்றுமில்லை. அப்படி இவர்கள் செல்வமும் பயனற்றது என்பதனை,

**"எட்டிபழுத்த இருங்கனிவீழ்ந்தன**
**ஒட்டிய நல்லறம் செய்யாதவர் செல்வம்**

**வட்டிகொண்டு ஈட்டிய மண்ணின் முகந்திடும்**
**பட்டிப் பாதகர் பயன் அறியாரே"[31]**

இப்பாடலால் உணர்த்துகின்றார்.

### ஒழுக்கம் அற்றாருக்கு உதவுதல் கூடாது

உயர்குணம் பண்பு, ஒழுக்கம் இல்லாதவர்களுக்கு உதவுவது என்பது,

**"கோலவறட்டைக் குனிந்து குளகிட்டுப்**
**பாலைக் கறந்துபருகுவதே யொக்கும்**
**சீலமும் நோன்பும் இல்லாதவர்க்குஈந்தது**
**காலம் கழிந்த பயிரது ஆகுமே"[32]**

பால்தராத பசுவிற்கு புல்தழைகளை தந்து பாலைக் கறந்து குடிப்பது போலாகும். நல்லவர் அல்லாதவர்களுக்குச் செய்யும் உதவி பருவத்தில் செய்யாத பயிர்த்தொழில் போல பயனற்றதாகும் என்கிறார்.

அகம் சார்ந்த இறையுணர்வும், சமூக நெறிகளும், புறம் சார்ந்த இயற்கைச் சூழலும் சேர்ந்து தான் மனித சமுதாயத்தை வளமையுறச் செய்கிறது. தனிமனித ஒழுக்கமே சமுதாய ஒழுங்கை நாளும் வளர்த்துச் செம்மையுறச் செய்யும் வகையில் இறையியல் ஒழுக்கநெறி மனித நன்னடத்தை வழி நடத்துகின்றன என்பதை சைவ திருமுறைகள் வாயிலாக உணரமுடிகிறது.

### துணைநூற்பட்டியல்


1. ஈசுவரபிள்ளை, தா., பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை, ப.11.
2. மேலது, ப.12.
3. திருமந்திரம், 248.
4. மேலது, 264:3-4.
5. மேலது, 250.
6. மேலது, 196.
7. மேலது, 252.
8. மேலது, 2901.
9. மேலது, 2891.
10. மேலது, 2927.
11. மேலது, 2422.
12. மேலது, 2423.
13. மேலது, 2192.
14. மேலது, 2034.
15. மேலது, 2024.
16. திருஞான.2905.
17. மேலது, 2909.
18. திருமந்திரம், 1686.
19. மேலது, 1677.
20. மேலது, 2313.